Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/399 of 1958.

விரோதிஞு (1889) ஆவணி மீ ௨௨உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எடு] யாழ்ப்பாணம்:- சோபகிருது ஞூ ஆனி மீ ௭௨ வெள்ளிக்கிழமை (21 June. 1963) [இல-கஉ]

# சைவ சமய ஆசிரியர்களுக்கு

## இலவச சமயப்பயிற்சி

———o———

### சபையின் உதவியுடன் தொடங்கக் கோரிக்கை

சைவ சமய பாட புத்தகங்கள் தெரிவு செய்யப்படும்போது தம்மையும் கலந்தாலோசிக்கும்படி கல்வி இலாகாவுக்கு உத்தரவிடவேண்டுமென்று சைவ பரிபாலன சபையினர் கல்வி அமைச்சருக்கு அனுப்பிய விண்ணப்பத்தில் வேண்டியுள்ளனர்

சைவபரிபாலனசபை அமைச்சருக்கு அனுப்பியுள் விண்ணப்பத்தில் சபையின் தீர்மானம் குறித்து மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:—

பௌத்த மத மாணவர்கள் அதிகமாக இருக்கும் பாடசாலைகளில் பௌத்த மத சார்புள்ள தலைமையாசிரியர்களும் சைவ மதமாணவர்கள் அதிகமாக இருக்கும் பாடசாலைகளில் சைவ சமய சார்புள்ள தலைமையாசிரியர்களும் நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதை சபை வரவேற்கும் அதே நேரத்தில் இத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் கல்வி இலாகா காலதாமதம் செய்வதுகுறித்து வருத்தம் தெரிவிக்கிறது.

சமய பாட போதனை இப்பொழுது பாடசாலைகளில் வெறும் கேலிக்கூத்தாக மாறியுள்ளது. இதனல்-சமுகத்துக்குப் பெரும் ஆபத்து நேரிடக்கூடியதாகவிருக்கிறது. எனவே பாடசாலைகளில் சமயபோதனை எவ்வித நிலையிலிருக்கிறது என்பதுபற்றி அறியுமாறு கல்வி அமைச்சர் உதவி வித்தியாதிபதிகளுக்கு உடனே உத்தரவிடவேண்டும்.

அரசாங்கத்தின் திட்டம் நிறைவேற்றப்படும்போது கிறிஸ்தவமத சார்புள்ள தலைமையாசிரியர்களுக்கும் அரசாங்கம் இடந்தேடித்தரவேண்டுமென்பதை சபை நன்கு உணரும். இவர்கள் இடமாற்றம் செய்யப்படும்போது இவர்களுக்கு வசதியளிக்கக்கூடிய விதத்தில் அமையும் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வது நல்லதாக இருக்கும். முன்னர் கிறிஸ்தவ பாடசாலைகளாக இருந்து இப்போது பௌத்தமத மாணவர்களும் சைவ மாணவர்களும் அதிகமாக இருக்கும் பாடசாலைகளுக்கு நல்ல தகுதியுடைய பௌத்த - சைவ தலைமை ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவேண்டும். இதனல் கூடிய சீக்கிரத்தில் உகந்த நல்ல சமய சூழ்நிலையை உருவாகக்கூடியதாக இருக்கும்

சைவ சமய போதனையைப் பாடசாலைகளில் திருப்திகரமாகச் செய்வதற்குப் போதிய சைவ ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமெனச் சபை கேட்டுக்கொள்கிறது. கிறிஸ்தவ ஆசிரியர்கள் கிறிஸ்தவ மாணவர்களின் எண்ணிக்கை விகிதாசாரப்படியும் சைவ ஆசிரியர்கள் சைவ மாணவர்களின் எண்ணிக்கை விகிதாசாரப்படியும் நியமிக்கப்படவேண்டும். சராசரி நிலையாகும்வரை சைவ ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படவேண்டும்.

சபைத் தொண்டர்கள் சைவ சமய ஆசிரியர்களுக்கு இலவசமாகப் பயிற்சி வகுப்புகள் நடத்த முன்வந்துள்ளார்கள் எமது உதவியுடன் இந்தப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெற ஒழுங்குகளை மேற்கொள்ளும்படி கல்வி இலகாவுக்கு உத்தரவிடுமாறு கல்வி மந்திரியைச் சபை கேட்டுக் கொள்கிறது. இதனல் பாடசாலைகளில் சமயக் கல்வி முறையாகப் போதிக்க வழிவகுப்பதாக இருக்கும்.

வித்தியாதிபதி, கல்வி மந்திரியின் நிரந்தரக்காரியதரிசி, வடபகுதி உதவி வித்தியாதிபதி ஆகியோருக்கும் மகஜரின் பிரதிகள் அனுப்பப்பட்டன.

—

## நயினுதீவு நாகபூஷணி அம்மன்

நயினுதீவு நாகபூஷணி அம்மன்கோயிலில் நாளை கொடியேறித் திருவிழா நடைபெற இருக்கிறது.

—

## நற் சிந்தனை

—:—

உருகி உருகி
உணர்வழிந்து நின்று
பெருகி வருமமிழ்தைப்
பருகுவது மெக்காலம்,

—

## நல்லூர்த்தேர்

நல்லூர்க் கந்த சுவாமி கோயிலுக்கு ஒரு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப் படவிருக்கும் புதிய தேர்த் திருப்பணியின் ஆரம்ப விழா அண்மையில கோயில் முகாமைக்காரர் திரு. மாப்பாண முதலியாரவர்களால் தொடக்கி வைக்கப் பெற்றது ——

—

கருத்து ஆதிசங்கரர்

## பறை தரு முருக

—:—

( வ. குகசர்மா )

கரைதனில் வந்து மோதிக்
கடலலை மாய்வ தேன்ன?
பறைதரு முருக நின்றன்
பதயுகம் பணிவார் தங்கள்
நிரைதரு பிணிகள் எல்லாம்
நீக்கியே யருளு மன்பால்
உரைதரு அலைவாய் தன்னில்
உகந்துவீற்றிருப்பாய் போற்றி.

—

உ

எல்லா வுலகமு மானுய் நீயே ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே ஞானச் சுடர்விளக்காய் நின்ருய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே புகழ்ச் சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே திருவையா றகலாத செம்பொற் சோதீ.

x x x

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச்சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

—

# மாயாவாத தும்சகோளரி நா. கதிரைவேற்பிள்ளை ஞாபகம்

[பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை]

(முற்றொடர்-12)

## தில்லையில் வேள்வி

சென்ற நூற்றாண்டிலே புண்ணிய பூமியாகிய சிதம்பரத்திலே ஆடு வெட்டி ஒரு பெரும் வேள்வி செய்தற்குத் தில்லைவாழ் பிராமணர்கள் பெருமுயற்சி செய்தார்கள். ஆறுமுக நாவலர் சிதம்பரத்திலே சைவப்பிரகாச வித்தியாசாலை தாபித்த காலம். ஆயிரத்தெண்ணூற்றறுபத்து நான்காம் ஆண்டு (1864) அக் காலத்தை அடுத்து நிகழ்ந்தது இந்த வேள்வி முயற்சி.

ஆறுமுகநாவலர் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே, தேர்த்திருவிழாவுக்கு முதனாளிரவு, ஆட்டைத் தறிக்கும் ஆயுதத்தாலே தமது தலையைத் தறியுங்கள் என்றவர். இப்படிப்பட்ட நாவலர் கோயில் என்று சிறப்பித்து வழங்குஞ் சிதம்பரத்திலே தீட்சிதர்கள் என்று தம்மைச் சிறப்பிக்கும் பிராமணர்கள் ஆடுகளைத் தறிக்கச் சும்மா பார்த்துக் கொண்டுதானிருப்பாரா?

நாவலர் தமது வித்தியாசாலையிலே மகா பெருங்கூட்டமொன்று கூட்டினர். சேர சோழ பாண்டி மண்டலங்களிலும் தொண்டை மண்டலத்திலும் மற்றும் பிற இடங்களிலும் உள்ள நல்லறிஞர்கள் பிரபுக்கள் என்றுள்ளவர்களையெல்லாம் அழைத்து, சிதம்பரத்திலே கொலைக்கள வேள்வி புரிவது மகா தப்பு என்று உக்கிரகண்டனஞ் செய்தார். கேள்விகள் எழுந்தன.

'வேதம் வேள்வியை விதித்திருக்கின்றது ஆட்டுக்கும் நாட்டுக்கும் அரசனுக்கும் வேள்வியால் நன்மை என்பது வேதக் கருத்து. வேள்வியைத் தடுப்பது வேத வேள்வியை விதித்த வேதத்தை நிந்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

—

# மலாயாவில் தமிழருக்குப் பாராட்டும் பரிசிலும்

கடந்த 3-6-63ல் அன்று சிங்கப்பூரில் நாலாவது ஆண்டுத் தேசிய தினம் கொண்டாடப்பெற்றபோது சிங்கப்பூர் அரசநாயகர் (யாங் டீ பேர்துவான், 423 பிரமுகர்களுக்கு தேசிய தினப் பதக்கங்கள் வழங்குவதாகத் தெரியப்படுத்தியுள்ளார். இத்தொகையினரில் சில இலங்கைத் தமிழ் பிரமுகர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சு இலாகாவிலிருந்து இளைப்பாறிய திரு. ஏகாம்பரம் பரராஜசிங்கம் அவர்களுக்கும் வைத்தியப் பகுதியிலிருந்து இளைப்பாறிய திரு T. ஆறுமுகம அவர்களுக்கும் நகரசபைப் பகுதியிலிருந்து இளைப்பாறிய திரு வே செல்லையா அவர்களுக்கும் 'நீண்ட காலசேவைப் பதக்கங்கள்" அளிக்கப்படும்.

சாம்ராச்சியப் பகுதியில் வேலை பார்க்கும் திரு அ சிவஞானபிள்ளை அவர்களுக்கு திறமையான சேவைப் பதக்கம் அளிக்கப்படும்.

திருவாளர்கள் M.பொன்னுத்துரை, M. A. கயபதி P. இராசரத்தினம் A. T. இராசா, N. K. வன்னியசிங்கம், V.K.R. பதி, A. D. பொன்னம்பலம் S. சுப்பிரமணியம் ஆகிய இவர்களுக்கு தம் கடமைகளை நன்கு புரிவதற்குப் பாராட்டுப் பதக்கங்கள் அளிக்கப்படும் என அறிவிக்கப்பெற்றது.

—

## விவேகானந்தர் நூற்ருண்டுவிழா

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (23-6-63) மாலை 6 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் சென்னைப் பல்கலைக் கழக தத்துவப் பேராசிரியர் டாக்டர் ரி, எம். பி. மகாதேவன் அவர்கள் பகவத் கீதை என்னும் பொருள் பற்றித் தமிழில் சொற்பொழிவாற்றுவார்கள்.

—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சோபகிருது ஹூ ஆனி மீ
எ உ வெள்ளிக்கிழமை

## சட்ட, நீதிச் சால்பு

சென்ற சனிக்கிழமை உலகமெங்கும் சட்டநீதிச் சால்பு நாளாக நினைவு செய்யப்பெற்றது. நீதியும் சட்டமும் அடிப்படையில் ஒரு நீர்மையன. ஆனாலும் வேறு பொருள் தரும் சொற்கள். நீதி உண்மை ஒழுக்கத்தை உணர்த்தி வாய்மை காப்பகர்காற்றுவதைப் புண்ணியமென்றும், அதற்கு மாருகவுள்ள செயலைப் பாவம் என்றும் வகுத்துப் பாதகஞ் செய்வோர் தண்டனைக்குரியவர் என்பதையும் எடுத்துக் காட்டுவது. இந்த ஒழுக்கப் பண்பை உலகில் நடைமுறையிற் கொண்டுவருவதற்காக அந்த அமைப்பில் சட்டம் இயற்றப்பெறுகின்றது.

முடிமன்னர் காலத்திற் சட்டத்தை வேந்தர்கள் இட்டார்கள். சமய நூலறிவும் ஒழுக்கநூல் உணர்வும் உள்ள தலைமையுடையவர்களே நாடாளும் அரசர்களானுர்கள். இறைவனை இறைஞ்சி எப்பணியையும் இயற்றி வந்தனர்; தன்னயம் இன்றி மன்னுயிர் நயம் காத்து வந்தனர்; மனுநீதி கண்டமாச்சோழன் போன்றவர்களின் வாழ்க்கை இவ்வுண்மையைப் பு[illegible] படுத்தும்.

குடிமன்னர் [illegible] சி வந்ததும் மக்க[illegible] சட்டம் வகுக்கும் உரிமையைப் பெற்றனர். இம் மன்றத்துக் குரியவர்களை மக்கள் ஆராய்ந்து எடுப்பதற்குத் தேர்வு என்னும் ஒரு வாக்குரிமை வழி பிறந்தது; எவ்வாறு, முற்காலத்தில் மன்னர்கள் அறிவு ஒழுக்கம் உடையவர்களாய் இறைநெறி நிற்பவர்களாய் இருத்தல் வேண்டுமென்று எண்ணப்பெற்றதோ அவ்வாறே மக்கள் மன்றம் புகும் உறுப்பினரும் அத்தகைய உத்தம ஒழுக்கசீலர்களாதல் வேண்டுமென்றது பெறப்படும்.

சட்டங்கள் இருந்தும் அவற்றுக்கமையாதவர்களே அமைச்சர்கள் ஆனல் ஆட்சியின் கதி யாதாகும்? இங்கிலாந்து தேசத்தில் யுத்த அமைச்சர்மீது சுமத்தப்பெற்ற குற்றங்களை யோசித்துப் பார்க்கும்பொழுது எங்குமில்லாத இழுக்குக் காவலரிடம் காணப்பெறின் யாரை நம்பலாம் என்ற எண்ணம் எழுகின்றது சட்ட நீதிச் சால்பை நிலைநாட்டும் நினைவு நாளிலே

இவற்றையெல்லாம் ஆராய்ந்து உணருதல் வேண்டும், வாழ்வாங்கு வாழ்பவர்களே ஆளும் மன்றத்தில் அங்கத்தவர்களாக அமைதல் வேண்டுமென்ற உண்மையைத் தேர்ந்தாற் சட்டம் இயற்றுகின்றவர்கள், சான்ருேராகவும், அவர்கள் அச்சட்டத்தைப் பேணி நடந்து காட்டி நாட்டிற் சட்டநெறி ஓங்க உதாரண புருடர்களாகவும் திகழும் வகையில் பாராளுமன்றம் அமையும். நீதிநெறி வழுவாத முறையை நேரிற்காணலாம்.

—:—

# எறும்பிடை நாகூழ்போல் புலனிடை மனிதர்

இவ்வுலகில் வாழும்மக்கள் யாவரும் இன்பம் அடைய வழி காட்டிய மெய்யன்பர் மணிவாசகனுர். அவர் பிறவிக்கடலை நீந்த அழுது அரனின் திருவடிப் புணையைப் பற்றிய பேரன்பர். அவர் கருங்கன் மனமுங் கரையப் பாடிய அருட்செல்வர்.

இம்மாசம் (கஉ) உ 26 6-63ல் மணிவாசகர் திருநட்சத்திரம். திருவாசகம் ஓதிப் பரம்பொருளின் திப்பிய கருணைபெறச் சைவ சமயிகளில் ஆடவர் மகளிர், மைந்தர் ஆகிய யாவரும் முன்வந்து நற்பயனடைவது மிக மிக அவசியமாகும். மெய்யருளை நாடுங்கள்! கட

பிரமஸ்ரீ.
வ. மு. இரத்தினேஸ்வரையர்

வுளின் பேருபகாரத்தைப் பாடுங்கள்!

"தந்ததுன் றனைக் கொண்ட
தென் றனைச்
சங்கரா! ஆர்கொலோசதுரர்
அந்தமொன்றில்லா ஆனந்தம்
பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்
றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட
வெம்பெருமான்
திருப்பெருந்துறையுறைசிவனே!
எந்தையே! ஈசா! உடலிடங்
கொண்டாய்
யானிதற் கிலனோர்
கைம்மாறே"

இது, கைம்மாறு கருதிப் பல அல்லல் விளைக்கும் மக்கள் பாட்டு அன்று. நிறையருட் குன்ருன சிவநாமத்தையே சைவசமயச் சீரியோர் நாத்தழும்பேறக் கூறுவது மரபாகும். நேற்று வந்தாரும் இன்று வந்தாரும், பாடிய போலிப் பாடல்கள் தீங்கையே விளைக்கும். புண்ணிய நூலல்லாத கேள்வியைக் கேட்டல் காலத்தின் ஓலம்போலும்! நிற்க;

திருவாசகத் தேனைப் பருகினுல் பழவினைகள் யாவும் பாறிவிடும். சிவப் பிரகாச சுவாமிகள் "வாதவூரன்பு பாவெனப் படுவதுன்பாட்டு" என்ருர்.

மணிவாசகராகிய திருவாதவூரடிகள் பரமாசாரியரை அடைந்து உபதேசம் பெற்றவர். புலன்களின் கொடுமையை நன்கு அறிந்து அவற்றை வென்றவர். "எறும்பிடை நாகூழென்ன" என்ற உவமையைச் சிந்தித்துப்பாருங்கள். நாடோறும் வாழ்நாள் வீண் நாளாகச் செல்வதைச் சிந்திக்க வேண்டாமா? யோகர் சுவாமிகள் தினந்தோறும் தியானம் செய்தலோடு அருட்பாடல்களை வாயாரக் கூறுவதோடு, தமது பயன் கருதாது மக்களைத் தூண்டி அதற்கான நிலையத்தையும் அமைக்கச் செய்தார்கள் இது சிவபுண்ணியமே!

மணிவாசகரோ! தான் பெற்ற இன்பத்தின் மூலத்தை, "நானேயோ தவஞ் செய்தேன், நமச்சிவாய எனப் பெற்றேன்" என்று கூறுகின்ருர். மூலமந்திரம் முதற் கடவுளே!

"பிணக்கிலாத பெருந்துறைப்
பெருமானுன் நாமங்கள்
பேசுவார்க்

கிணக்கிலாதோ ரின்பமேவருந்
துன்பமேதுடைத்தெம்பிரான்

உணக்கிலாததோர்வித்துமேல்
விளையாமலென் வினை
யொத்தபின்
கணக்கிலாத்திருமேனிவந்து
காட்டினுய் கழுக்குன்றிலே"

என்று இருவினையொப்பும் மலபரிபாகமுமே பிறவியை அகற்றி ஆதமலாபங் கைகூடச் செய்யும் என்பதையும் இனிது விளக்கினுர். மணிவாசகர் நாமம் வாழ்க.

## அணிந்துரை அரங்கம்

### விக்கினேசுவர பூஜாவிதி

இப்பெயர் கொண்ட புஸ்தகம் ஒன்று எமது பார்வைக்கு எட்டியது. முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானது மூத்த திருக்குமாரர் என்று உபசாரமாகச் சொல்லப்படுபவரும், சிவபரம்பொருளே சக்தியம்சத்தை அகத்தே கொண்டு, பிரணவப்பொருளாகிய ஓங்கார வடிவாகும் யானைமுகமும், துதிக்கை சேர்ந்த ஐங்கரங்களும, பெருவயிறும், குறுந்திருவடிகளும் அமைந்த விநாயகப்பெருமானுக் காட்சிதருபவரும் ஆதலின், முதறபூஜை கொள்ளுதற்கு உரியவராகிய விக்கினேசுவரப் பெருமானுரது பூஜாவிதி எவரும படித்து அறிய வேண்டிய ஒரு நூலாகும்.

கணேச மூர்த்தியைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் மாரக்கமே காணுபத்தியம் எனப்படும். அது சைவ சமூகததில் அகச்சமயம் ஆறினுள் ஒன்ருக எண்ணப்படுவது. இந்த நூல் பூஜை செய்பவர்களுக்கே சிறப்பாக உரியது. ஆயினும், செய்விப்பவர்களும், வழிபடும் அடியார்களும் இதனைப் படித்து அறிந்திருப்பதனுல் தாம் செய்யும் வழிபாட்டில் ஒரு விசேடபற்று உண்டாகும், அதனுல் பெரும் பயன் கிடைக்கும,

இந்த நூலை வெளியிட்டவர்கள் கிழக்கு இலங்கையி

தொடர்ச்சி 3-ம் பக்கம்)

நேயர்கள் நெஞ்சம்

# விஞ்ஞானரீதியில் சமய விளக்கம்

## இளைஞர்களை நாத்திகத்திலிருந்து விடுவிக்க வழி

தங்கள் 6-6-63-ந் திகதிப் பத்திரிகையில பசுக்கொலை பற்றிய கடிதத்தைப் படித்தேன். கடிதக்காரர் கூறியிருப்பது அத்தனையும் உண்மை. சைவர்களாகிய எமது நிலைமையை நினைந்து கவலவேண்டியிருக்கிறது. 'பசு' வெனின் ஆன்மா. அத்தகைய ஆன்மாவைப் போன்றதே பூசிக்கப்படுவதற்குரிய பசுவுமாகும். பசுவின் அவயவங்கள் ஒவ்வொன்றிலும் தேவர்கள் வதிவதாகக் கூறப்படுகின்றது. பசுவின் சாணத்தைச் சுட்டெரித்து. சிவசின்னமான விபூதியாகத் தரிக்கிறோம். பசுவினின்றும் பெறப்படும "பஞ்சகவ்வியம்" எனப்படும் ஐந்து பொருட்களும் இறைவனுக்குரிய அபிடேக திரவியங்களாக மதிக்கப்படுகின்றன. இத்தகைய ஒரு புனிதமான பிராணியைக் கேவலம் ஊனுக்காகக் கொல்லுதல் பெரும் பாவம் என்பது சொல்லாமலே புலப்படும்.

சைவத்தைப் பேணிக்காக்க வேண்டிய நம்மவருட் சிலர் பசுவைக் கொன்று அதன் ஊனையும் உண்ணத் தலைப்பட்டுவிட்டார்களே! பசுவின் இறைச்சி விற்கப்படினும் வாங்கி உண்ணக்கூசிய எம்மனோர் இப்பொழுது அதன் சுவையைப் புகழ்ந்து உண்ணத் தலைப்பட்டதற்குக் காரணம் சைவ ஒழுக்கங்களை அறியாமையேயாகும். சமய அறிவு குன்றி நாஸ்திகம் வளர்ந்து வருவதும் ஓர் காரணமாகும். ஆகவே எமது சமய அறிவை வளர்க்க ஆவன செய்தல் இன்றியமையாத ஒன்ருகும்.

பாடசாலைகளில் சைவ சமயத்தைப் போதித்தால்மட்டும் போதாது. போதனையின்படி செயலிலும் நடக்கவேண்டும். சைவபரிபாலன சபை, இந்து சமய ஆலோசனைச் சபை, விவேகானந்த சபை, திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண சபை, அகில இலங்கை இந்துமாமன்றம் போன்ற சைவசமயச் சபைகள், சைவ சமயப்பிரசாரங்களில் ஈடுபட்டு, கிராமந்தோறும் ஒவ்வொரு சைவப்பிரசார சபையை ஏற்படுத்தி அவற்றின்மூலம் நல்ல சிறந்த தொண்டாற்றலாம். சைவ சமய உண்மைகளை, கிரியைகளை விஞ்ஞான ரீதியில் விளக்கிப் பிரசாரஞ்செய்யின் தற்கால இளைஞர்கள் நாஸ்திகர்களாக வீண் வழிகளில செல்வதனைத் தடுக்கலாம் ஆலயங்களில் நடைபெறும் கிரியைகளை (ஒவ்வொன்றையும்) எதற்காகச் செய்யப்படுகின்றன என்று விளக்கினுல் சகலருக்கும் சைவப் பற்றும் நம்பிக்கையும் ஏற்பட ஏதுவாகும். சைவ சமய ஞானம் ஏற்படின் பசுவின் ஊனை உண்ணத் தலைப்பட்டவர்களும் அதனை உண்ணுது நல்வாழ்வு வாழ ஏதுவாகும். இச் சிறந்த கைங்கரியத்தைச் சைவஉலகம் தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க சகல சைவ சமயச் சங்கங்களும் ஒன்று சேர்ந்து ஆலோசித்துக் கடமையாற்ற எல்லாமவல்ல இறைவன் அருள் புரிவானுக.

சோ. க. வேலாயுதர்
குருநாகல்,
10-6-63.

எஃப். ஜீவாஜி சகோதரர்கள்
மொத்த, சில்லறை வியாபாரிகள்

அச்சுக்கந்தோர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தேவையான காகிதம், அச்சடிக்கும் மைகள், பாடசாலை உபகரணங்கள், பாண்சாலைகளுக்கான 'கேக்' பெட்டிகள், கடுதாசிப்பைகள், வியாபாரிகளுக்கான என்வலப்புகள், நூல், மை, கெரப்பி, பென்சில், பேனை, பலவித மட்டைகள், சோடனைக்கடுதாசிகள் என்பன எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.


எஃப். ஜீவாஜி சகோதரர்கள்,
ஜுபிலி பஜார், இலக்கம் 9, (ராணி சினிமாவுக்கருகில்)
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்:
ஜீவாஜி சகோதரர்கள்,
50, புதிய சோனகதெரு கொழும்பு-12

கிளை:
இன்டிப்பென்டன் ரேடிங்கோம்பனி,
51A, 1-ம் குறுக்குத்தெரு
கொழும்பு – 11

தொழிற்சாலை: 146, புதிய சோனகத்தெரு, கொழும்பு 12,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அணிந்துரை அரங்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லுள்ள மட்டுநகர் பிராமண சமூக சேவாசங்கத்தவர் எனக் காணப்படுகிறது. அதுவும், அவர்கள் செய்யும் முதல் வெளியீடாக அமைந்து விநாயகப் பெருமானது திருவருளுக்கு உரியதாகிறது சங்கத்தவரின் வேண்டுகோளுக்கு இசைந்து இதனை எழுதியவர் திரிகோணமலை ஆரிய திராவிட பாஷாவிற்பன்னர், சிவஸ்ரீ. இ. கு. பூர்ணாநந்தேசுவரக் குருக்கள் ஆவர். இது வடமொழியில் எழுதப்பட்டதாயினும், பிரயோகத்தில் இன்றியமையாத இடங்களில் தமிழில் விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாகக் காட்டுவதானால் பூஜை செய்பவர் வெளியே செய்யும பூசையைக் காட்டிலும் தமது அகத்தே (மனத்தில) செய்யும அந்தர்யாக பூசை மிக்க சிறப்புடையது எனபது புலப்படும் படியாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு:-

["இருதயத்தை பூஜை ஸ்தானமாகவும் நாபியை ஓமஸ்தானமாகவும். (புருவ மத்தியில்) பிந்துஸ்தானத்தை ஸமாதிஸ்தான்மாகவும், மனசில் கறபித்துச் சொல்லிய முறைப்படி கிடைத்த புஷ்பம் முதலியவற்ருல் இருதய(த்துள்ளிருக்கிற) கமலத்தில் விக்கினேஸ்வரரை மனோ பாவனையால் சர்வோபசாரங்களாற் பூஜித்து, நாபியாகிய குண்டத்தில தாஞக ஜ்வலிக்கின்ற அக்கினியில் ஞானுக்கினியைத் தியானித்து, கணேசரைப் பூஜித்து, பிராணயாமஞ் செய்து (காறறை உள்ளிருத்தலாகிய) பூரகத்தால் பிந்து (புருவமத்தி) ஸ்தானத்திற் பெருகும் அமிர்த ரூபமான நெய்யினுல் (மானசமாக) ஓமத்தையும் செய்து உள்ளே பூசித்த கணேசருக்குச் சமர்ப்பித்து மானஸ பூஜையை முடித்து (பிந்து (புருவமத்தி) ஸ்தானத்தில பிரகாசிக்கிற தேஜோ ரூபமாகக் கணேசரைத் தியானித்து இனி வெளியே பூஜிப்பேன் எனறு பிரார்த்தித்து. ]

இந்த அந்தர் யாக பூசையின் பெருமையைப் பெரிய புராணத்திலே வரும் பூசலார் நாயனரது வரலாறு தெளிவு படுத்தும்.

திருநின்றியூரில் மெய்யன்பராக விளங்கிய பூசலார் என்னும் அந்தணர் இறைவனுக்கு ஆலயம் அமைக்க விரும்பினர். அதற்கு அவரிடம் பொருள்வளம் இல்லை. அதனுல், ஒரு சுபதினத்தில் ஆலயம் அமைப்பதற்கு வேண்டிய இடத்தைத் தேடிக் கொண்டதாக அவர் மனத்தில் நிச்சயித்து அத்திவாரப் இடுதல் முதலாக ஒவ்வொரு நாளும் மனக் கற்பனையிலே கோயில் கட்டுவாராயினர்.

அதே நேரத்தில் காஞ்சீபுரத்தில் காடவர்கோன் என்னும் பல்லவ மன்னனும் இறைவனுக்கு ஆலயம் எழுப்ப விரும்பிப் புறத்தே பொருள்கொண்டு அமைப்பானுயினன், இருவரும் ஒருவரை யொருவர் அறியாமலே ஓரேகாலத்தில் ஆலயங்களை அமைத்து முடித்தனர். மேலும் இருவரும் ஓரே தினத்தில் ஓரே முகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் செய்ய - இறைவனைத் தாம் கட்டிய கோயிலில் எழுந்தருளச் செய்ய நிச்சயித்தனர். ஆயினும், இறைவன் மன்னனது சொப்பனத்திலே தோன்றி, "பூசலாரும் நீயும் ஒரே நேரத்தில் எம்மை அழைக்கிறீர்கள். யாம் பூசலார் கட்டிய கோயிலுக்கே போக விரும்புகின்றேம்.

அதனுல் மன்னவ! நீ பிறிதொரு தினத்தைக் குறித்துக் கும்பாபிஷேகம் செய்வாயாக" எனக் கூறியருளினுர் என்பது வரலாறு. இதிலிருந்து அந்தர் யாக பூசையின் சிறப்பு நன்கு விளங்குமன்ருே!

மேலும் இந்த நூலில் பூஜை வழிபாட்டிலே இறைவன் திருமுன், தூபம், தீபம் முதலான உபசாரப் பொருள்களைச் சமர்ப்பிக்கும்போது சொல்ல வேண்டிய மந்திரங்கள் செப்பமாகக் குறிக்கப் பட்டிருக்கின்றன. பதினறு, நூற்றெட்டு எனச் சொல்லப் படும் விநாயக அருச்சனை மந்திரங்களும் இறுதியிற் காட்டப்பட்டுள்ளன.

இதன் விலை ரூபா 2/— யாழ்ப்பாணம் பெரியகடை சோதிடப்பிரகாச புத்தகசாலையிலும், மட்டக்களப்பு பழைய வாடிவீட்டுத் தெரு, 8 ஆம் இலக்கத்தில் உள்ள பிராமண சமூகசேவா சங்கத்திலும், கல்லடி உப்போடை பிள்ளையார் கோவில், வியாகரண சிரோமணி பூ தியாகராச சர்மா அவர்களிடத்திலும் இதனைப்பெற்றுக்கொள்ளலாம. இப் புத்தகம் ஒவ்வொரு ஆலயத்திலும், ஒவ்வொரு பூசகர்களிடத்தும் இருக்க வேண்டியது மிக அவசியமாகும். யாவரும் இதனை ஆதரித்து இச்சங்கத்தாரின் முயற்சியை மேலும் ஊக்கப் படுத்துவார்களாக.

க. வை. ஆ.

திருவதிகை - மனவாசகங்கடந்தார்

அருளிச்செய்த

# உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் - 22)

### மாணுக்கனது வேண்டுகோள்

வாக்கு மனமிறந்த வான் கருணை யாளனுருத்
தாக்கறவே நிற்குந் தனிமுதல்வா — நீக்காப்
பதியினைப்போல் நித்தம் பசுபாச மென்றுய்
கதியிடத்து மூன்றினையுங் காட்டு. 49.

கொ - கூ: வாக்கு மனம் இறந்த வான்கருணையாளன் உரு (கொண்டு, தாக்கு அற (+ஏ) நிற்கும் தனி முதல்வா நீங்காப் பதியினைப் போல், பசு பாசம (என்பவைகளும்) நித்தம் என்ருய்; (அங்ஙனமாயின்) கதி இடத்தும் (அம்) மூன்றினையும் காட்டு.

ப - ரை: வாக்கு மனம் இறந்த - பாசஞானம் பசு ஞானங்களால் அறிதற்கரியனுய் அப்பாற்பட்டு நின்ற, வான்கருணையாளன் உரு(கொண்டு) - எல்லையில்லாத (பரிசுத்தமான) பேரருளையுடைய இறைவனேயாய்த் திருமேனி கொண்டு, தாக்கு அற நிற்கும் தனி முதல்வா - பாசங்களினுலே பற்றப்படுதலின்றி எழுந்தருளியிருக்கும் ஞானுசாரிய சிரேட்டரே, நீங்காப் பதியினைப் போல - யாவற்றிலும் எக்காலத்திலும் விட்டு நீங்காமல் (வியாபகமாய்) இருக்கும இறைவனைப்போல, பசு பாசம் நித்தம் என்ருய் - ஆன்மாவும் மலமும் அழியா இயல்பின என்று அருளிச்செய்தீர், கதி இடத்தும் மூன்றினையும் காட்டு -(அங்ஙனமாயின்) முத்திநிலையிலும் பதி பசு பாசம் ஆகிய) அம் மூன்று பொருள்களும் அழியாமல் நிற்கின்ற முறைமையை அடியேனுக்கு விளக்கியருளுவீராக.

"நீங்கா எனுஞ் சொல் எதுகைத்தொடை நோக்கி 'நீக்கா' எனும் வலித்தல் விகாரமாய் நின்றது. 'ஏ' அசை, பதி பசு பாசம மூன்றும் எக்காலத்தும் (அழியாமல்) உள்ள பொருள்கள் என்பது சைவசித்தாந்தத் துணிவு. அங்ஙனமாயின் முத்திநிலையிலும் அவை மூன்றும் உளவாதல் வேண்டும். ஆனுல், "அந்தன் விழிக் குற்றம் அற ஆதித்தன் நின்றதுபோற் கொள்" என ஆசிரியர் கூறினுராக, அத்திருட்டாந்தத்தில் விழிக்குற்றம் அறுதல்போல ஆன்மாவின் ஆணவக்குற்றமும் முத்திநிலையில் அறும் என்றே அறியக் கிடத்தலின், அவ் ஆணவமாகிய பாசம் அற ஏனைய பசுவும் பதியுமாகிய இரண்டு பொருள்களே உளவாமல்லது முப்பொருளும் உளவாதல் எங்ஙனம்? என மாணவகனுக்கு ஐயம் எழுந்தது. எழவே, "கதியிடத்து மூன்றினையுங் காட்டு" என்று விண்ணப்பித்தானென்க. இதற்கு விடை மேல்வருஞ் செய்யுளிற் காண்க.

பொழிப்பு:- ஏகதேச ஞானங்களுக்கு அப்பாற்பட்டு நின்ற அருளுருவின் இறைவனேயாய்த திருமேனிகொண்டு பாசத்தாற் பற்றப்படாது நின்ற ஞானுசாரிய சிரேட்டரே, யாவற்றிலும் எக்காலத்திலும நிறைந்திருக்கும் பதியைப் போலப் பசு பாசமிரண்டும அழியா இயல்பினவென்றீர். அங்ஙனமாயின், பதி பசு பாசம் மூன்றும் முத்தி நிலையிலும் அழியாதிருக்கும் முறைமையை விளக்கியருளுவீராக

—தொடரும்

## அடைவு நகை ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி கொழும்புத்துறை ரோட் 35 ம் இலக்கக் கடையில் ஸ்ரீமதி R. கனகரேத்தினம் அவாகளிடம் வைத்த அடைவுகளில் கீழ்க்காணும் நகைகளில் மீட்கப்படாதவைகள் 1963 ம் ஞூ யூலாய் 8உ (8-7-63) திங்கட்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| அடைவு இலக்கம் | வைத்த தேதி | நகையின் விபரம் |
|---|---|---|
| 704 | 13-10-53 | ஒருசோடி இமி. கல்லுவைத்ததோடு |
| 838 | 1-1-54 | ஒருசோடி இமிற்றேசன் குச்சு தோடு |
| 1909 | 11-5-55 | ஒரு கல் வைதத பென்ரன் |
| 1913 | 13-5-55 | ஒருசோடி தூககணமும் ஒருமோதிரமும் |
| 2249 | 1-2-56 | ஒரு சோடி தூக்கணம் |
| 3220 | 12-1-58 | ஒரு கல்லுவைத்த பென்ரன் |
| 3751 | 25-6-59 | ஒரு சோடி தோட்டுக் குச்சு |
| 3240 | 16-1-58 | இரண்டு சோடி தூக்கணம் |
| 3747 | 23-6-59 | ஒருஇமிற்றேசன் கல்லுவைத்தபதக்கம் |

643 காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்,
14-6-63.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏல விற்பனவாளர்,
கோட்கொமிசனரும்
விலைமதிப்பாளரும்.

M 46 14, 21-6-63.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி
டிஸ்திறிக்கோட்டில்
கலட்டி தந்தடல்
பொன்னர் வேலுப்பிள்ளை
—வழக்காளி.

இல, 2205.
1. கரைச்சி பன்றிசுட்டான் வல்லிபுரம் நல்லதம்பியும் பெண்
2. செல்லம்மாவும்
—எதிராளிகள்.

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 2205-ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்க்காணுமாதன விடாப்பில் நன்கு விபரிககப்படு மாதனங்கள் 1963-ம் ஞூ ஆடி மீ 20உ சனிக்கிழமை பி. ப. 2 மணி தொடக்கம் அவ்வக்காணிகட்குள் நின்று என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:— ரூபா 6308-75-ம், ரூபா 3500-க்கு 8-5-61 தொடக்கம் 29 - 8 - 61 வரையும் 12% வீத வட்டியும் பின் கூடிவரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு 324-90 சதமும்.

ஆதனவிடாப்பு:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப்பகுதி கரைச்சிப்பற்று பன்றிசுட்டானிறை குமுளம்பள்ளம் வயல் வாயுதாகில மதிப்பில் பதிவு 345. நெற்பரப்பு 350. எல்லை கிழக்கு வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளைக குரியவாதனமும் 2-ம் ஆதனமும், வடக்கு கோணன்குளத்துப் பிள்ளையார் கோவிலிருக்குமாதனமும் பேரம்பலம் செல்லையாவுக்குரிய வாதனம், மேற்கு பேரம்பலம் செல்லையாவுக் குரிய வாதனம், தெற்கு பெரியபச்சிலைப்பளி மண்டலாய வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக் குரிய வா தன மும் காலஞ்சென்ற ஆரியவாஞனந்த குருக்கள் விசுவநாதக்குருக்களின் உரிமைக்காரருக்குரிய[illegible] இவ்வெல்லைக்குட் சோந்த வயல் நிலமடங்கலிற் சொரியலாக அரைவாசி. பதிவு B 43/300.

2, ஷெ பன்றிசுட்டானிறை தமுளபள்ளம் ஏக்கர்5 பேட்சு 18. இது நெ. பர. 139, குளி 9 3/5. மதுரஞ்சோலையும் குமுளம்பள்ளமும் நெ. பர. 160 குளி 2 3/5. இருவகைக்கும் நெற். பர. 300. [illegible] 2 3/5. எல்லை கிழக்கு முடிக்குரிய [illegible]லம், வடக்கு ரோட்டு, மேற்கு [illegible]மும் கோணன்குளத்துப் பிள்ளை[illegible]ருக்குமாதனமும், முன் கூறி[illegible] ஆதனமும், [illegible]கணபதிப் பிள்ளைககுரியவாதனமும். இவ்வெல்லைககுட் சேர்ந்த வயல் நிலமடங்கலிற் சொரியலாய் 1/3பங்கு பதிவு B 44/1.

3. ஷெ பன்றிசுட்டானிறை வாயுதா நிலமதிப்பில் பதிவு இல. 261. மைவேலுங்கு வயல நெ. பர. 55½. பதிவு இல. 261, சித்திபுண்ணியவயல் நெ. பர. 55. இருவகைக்கும் கூடிய நெ. பர. 110½. எல்லை கிழக்கு கதிர்காமநாதன் பெண் மகேஸ்வரிக்குரிய வாதனம், வடக்கு 2-ம் எதிரி நல்லதம்பி பெண் செல்லம்மாவுக்கும் பங்காளருக்குமுரியவாதனம், மேற்கு சின்னககுட்டியர் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரியவாதனம், தெற்கு ரோட்டு வயல்நிலமடங்கலிற் சொரியலாய் அரைவாசி பதிவு B 44/2.

4. ஷெ பன்றிசுட்டானிறை மல்லகை வயல் இரண்டு பிரிவு நெற். பர. 300. இதில் ஆட்சிப் படி வடக்குப்பக்கமாசு நெ. பர. 75. எல்லை கிழக்கு நல்லதம்பி சங்கரப்பிள்ளைககுரிய வாதனம், வடக்கு உறுதிப்படி முருகன் வல்லிபுரத்துககும் பங்காளருக்குமுரியவாதனம், மேற்கு தண்ணீர் பாயும் வாய்க்கால், தெற்கு 2-ம் எதிரி நல்லதம்பி பெண் செல்லம்மாவுக்கும் பங்காளருக்குமுடைய வாதனம். இதில் 1/3 பங்கு பதிவு B 44/3

மு. நா. மார்க்கண்டு,
கொம்மிஷனர்.
சாவகச்சேரி, 22-6-63.

M 50 22-6-63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயாவாத துச்சகோளரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திப்பதாகும்''. என்றிங்ஙனம் பிரமாணங்கள் காட்டி வாதித்தார்கள்.

நாவலர் பிரமாணங்களை அட்சரந் தவருது ஏற்றுக் கொண்டார். வேத வேள்வி செய்யத் தக்கது; நன்மை விளைப்பது என்பதை எட்டுணையும் நாவலர் மறுக்கவில்லை.

வேதவேள்வியைச் செய்தற்கு அதிகாரிகள் நீங்கள் தாமா? உங்களுக்கு வேதம் போமா?

"மந்திர விதியின்
மரபுளி வாழா
அந்தணர் வேள்வி
ஓர்க்கும்மே ஒருமுகம்''

என்று திருமுருகாற்றுப் படை பேசும் அந்தணர்களா நீவிர்?

'புன்மையாம் பசுத்தடிந்து
புரையில் வேள்வி
ஆற்றியே,
தோன்மைபோ லெழுப்புமாறு'

செய்யவும் வல்லீரா? என்றின்னோரன்னவாறு கூடாவினர் நாவலர். வேள்வி ஸ்தம்பித்தது.

வேதத்தை நிந்தை செய்யாமலே வேள்வியைத் தடுத்தார் நாவலர். 'பார்ப்பான் பிறப்பு, ஒழுக்கங் குன்றக் கெடும்' என்பதை ஸ்திரப்படுத்தும் முகமாகக் கொலை வேள்வி நிறுத்தப் பட்டது. அப்பொழுதுள்ள பிராமணருக்கும் வேள்விக்கும் வெகுதூரம் என்பது நாவலர் கருத்து. அதனல், அவர் வேதத்தோடு பிராமணத்துவத்தையும் பேணி ... னர்.

நாவலர் கையாண்ட முறையைப் புத்தர் கையாளவில்லை.

பிம்பிசார மன்னன் முன்னிலையில் வேள்வி ஒன்று நடக்கிறது. ஆட்டு மந்தைகள் வேள்விச் சாலையை நோக்கி வருகின்றன. தீட்சிதர் ஒருவர் பெரிய கத்தி ஒன்றைக் கூர்பார்த்துக் கொண்டிருக்கின்ருர். வேத மந்திரங்கள் கோஷிக்கின்றன. வேள்விப்புகை வானத்தை மூடுகின்றது. இந்தச் சமயத்தில் கௌதமபுத்தர் ஒரு ஆட்டுக்குட்டியைக் கையிலேந்தியபடி வேள்விச் சாலையிற் பிரவேசித்துக் கண்ணீர்வார இரங்கி இரங்கி ஆடுகளைத் தறிக்காது தடுக்கின்ருர்.

அப்பொழுது பிராமணன் ஒருவன் எழுந்து 'ஓ கௌதம, வேதநிந்தை செய்யாதே. ஆட்டுக்கும் நாட்டுக்கும் மன்னனுக்கும் வேள்வி நன்மை விளைப்பது என்று வேதம் கூறுகின்றது' என்று வேத சுலோகங்களையுஞ் சொன்னன். கௌதமர் அதை நம்பவில்லை; பிம்பிசார மன்னன் வாளா இருந்தான். வேள்வி நிறுத்தப் பட்டது.

கௌதமரின் கருணையினல், ஆட்டுமந்தைகள் உயிர் பிழைத்தன. ஆனல் வேதம் நிந்திக்கப்பட்டது 'வேதத்தை விட்ட அறமில்லை' என்ற திருமூலர் வாக்குப் புறக்கணிக்கப் பட்டது. பிராமணன் சொன்ன வேத சுலோகங்கள் நின்று வற்றிப்போயின. புத்தம் தலையெடுத்தது அதனல் ஒரு சங்கரர் உதயஞ்செய்ய வேண்டியவரானர். —தொடரும்.

---

இவ்வாரம் 23-6-63 — 29-6-63

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

கல்வி வெற்றி நிச்சயம். அயலவர் அந்நியர்மூலமான இலாபங்களும் சிறு உடல் நிலைக்கோளாறுகளும் உண்டாம், வேலை அதிகமாகும்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

கண்ணேயும் இனத்தவருடன் சண்டையும் உண்டாம், தந்தை வழி உறவினரோடு எச்சரிக்கையாகக் கொண்டாடுக. பணமளவில் நல்ல வாரம். பழைய முதலீடுகள் நற்பலன்தரும்.

மிதுனராசி மிருகசீரிடம், 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம் பாதம்.

மன நிம்மதியிருக்காது. சிறு சுகவீனங்களுக்கு இடமுண்டு, பணமளவில் நல்லவாரம். அதிக வேலையும் ஆனல் போதிய பலனும் உண்டாம். விவசாய முயற்சியில் வெற்றி நிச்சயம்.

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

மனநிம்மதி இருக்காது. அலுவலகத்தில் சச்சரவுண்டாம். உடல் நிலை திருப்தியாயிருக்காது, கண்ணேய்கள் தொடர்ந்து இருந்து வரும். நண்பர்கள் மிக உதவுவர். பணமளவில் நல்ல வாரம்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

அலுவலகத்தில் சச்சரவுண்டாம். நீர் சில அனுவசிய கண்டனங்களுக்கு ஆளாக நேரிடும். பழைய முதலீடுகள் நற்பயன் தரும். எதிரிகளுக்கு இடுக்கண் நிச்சயம்,

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

தொழில் வெற்றி நிச்சயம்- புகழும் சமூக இலாபங்களும் ஏற்படும். ஆனல் சிறு உடல் நிலைக் குழப்பங்கள் ஏற்படலாம்- தாயாரின் உடல்நிலை ஊறுபடும்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தந்தைவழி உறவினரால் தொல்லைகளிடமுண்டு. தந்தையாரின் உடல்நிலை பாதிக்கப்படும் உமது சுதந்திரம் கட்டுப்பட்டிருக்கக்காண்பீர். இரகசிய எதிரிகளால் இடர் உண்டாம்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

ஞாயிறு காலை எச்சரிக்கையோடு கழிய வேண்டும். உடல் நிலைக்குழப்பம் ஏற்பட இடமிருக்கிறது. விபத்துகள்பற்றி எச்சரிக்கையாக நடக்கவும் பணமளவில் நல்ல வாரம். நிலபுலங்களால் இலாபமுண்டாம்.

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

ஞாயிறு மாலை, திங்கள், செவ்வாய் எச்சரிக்கையோடு கழிய வேண்டும். சில காலத்திற்கு உடல்நிலை திருப்தியற்றிருக்கும், பணமளவில் ஓரளவு நல்ல வாரம். ஆனல் நீர் கடுமையாக உழைக்கவேண்டிவரும்,

மகராசி உத்தராடம் 2, 3, 4. பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

பலன்கள் கலவைனக இருக்கும். முதலிருநாட்களும் வியாபாரக கொடுக்கல் வாங்கலுக்கு ஏற்றவை. செவ்வாய் மாலை, புதன், வியாழன் எச்சரிக்கையோடு கழியவேண்டும். கடைசி இரு நாட்களும் நன்மையானவையாகும். மன நிம்மதி இருக்காது.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

தொழிலுக்கு நல்ல வாரம். முயற்சிகளில் வெற்றியும் புகழும் நிச்சயம், உடல்நிலை ஊறுபடும். வயிற்றுக்கோளாறுகளுக்கு இடமுண்டு. குடும்ப விவகாரங்களும் குழம்பலாக இருக்கும். வார இறுதி இருநாட்களேயும் எச்சரிகையோடு கழிக்குக.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

நண்பர்களுடனும் இனத்தவருடனும் சிறு மோதல்கள் ஏற்படலாம, ஆனல் எதிர்ப்புகளைத் தாண்டிவிட முடியும். பணமளவில் நல்ல வாரம்.

---

## பிரசாரகருக்குப் பட்டமளிப்பு

சென்ற பத்துத்தினங்களாக, கந்தர்மடம் பழந்தெருப்பிள்ளையார் கோயிலில் தினமும் மாலை நேரங்களில் திருப்புகழ்பற்றிச் சமயப்பிரசாரகர் திரு. T. பொன்னம்பலம் அவர்களால் செய்யப்பெற்றுவந்த பிரசாரங்கள் இன்றுடன் நிறைவு பெறுகின்றன. அதனையொட்டி இன்று மாலை மேற்படி கோயிலில் திரு. பொன்னம்பலம் அவர்களுக்கு, பட்டமளித்துப் பாராட்ட முகாமைக்காரர்கள் தீர்மானித்திருக்கிருர்கள் எனவும், முகாந்திரம் E. P. இராசையா J P அவர்கள் இவ்விழாவுக்குத் தலைமைதாங்கி பிரசாரகரைப் பட்டமளித்துக் கௌரவிப்பார்களென அறியப்படுகிறது. ——

## இன்று தமிழ் விழா

கணேசையர் தமிழ்ச் சங்கப் பழைய வாலிபர் சங்கத்தின் ஆதரவில் மாவிட்டபுரம் வீமன்காமம் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் இன்று மாலை 5-30 மணியிலிருந்து சைவபரிபாலன சபைத்தலைவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை தலைமையில் தமிழ்விழா நடைபெறுகிறது இலக்கியத்தில் மகளிர் என்ற பொருளில் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் அவர்களும், ஈழத்தில் தமிழிலக்கியம் என்பதுபற்றி கலாநிதி திரு. க. சதாசிவம் M. A. அவர்களும், வள்ளுவன் கண்ட அரசியல் என்னும் விடயம் பற்றிப் பண்டித, வித்துவான் இ. திருநாவுக்கரசு அவர்களும், பாரதியின் பாஞ்சாலி சபதம் என்னும் பொருள்பற்றி தேவன் — யாழ்ப்பாணம் அவர்களும் உரை நிகழ்த்துவர், காலை இசை நிகழச்சிகளும் இடம் பெறும். ——

## தேர் வெள்ளோட்ட விழா

எதிர்வரும் (27 - 6 - 63) வியாழக்கிழமை காலை 8 மணிவரையில் சங்கானை அரசடி வயிரவர்கோவிலில் தேர் வெள்ளோட்ட விழா வள்ளல் திரு. சு. கனகசபைச் சிறுப்பர் அவர்களால் தொடக்கி வைக்கப் பட்டு நடைபெறும்.

பகல் 12 மணியளவில் தேர்ப் பிரதிஷ்டாபிஷேகம் நடைபெறும். அதன்பின் பண்டிதர் திரு. இ நமசிவாயம் அவர்கள் தேர்த் திருப்பணிபற்றி உபந்நியாசஞ் செய்வார்கள். தொடர்ந்து விசேட மேளக்கச்சேரிகள் நடைபெறும்.

மாலை 3 மணியளவில் நடராசப்பெருமானும் வயிரவப்பெருமானும், மந்திர கீதங்கள் தெய்வத்தமிழத் திருப்பாக்கள் மங்கள வாத்தியங்கள் ஒலிக்கத் தேரில் இவர்ந்து ஆலயத்தை வலம் வருவர்.

இரவு 7மணியளவில் ஒலிபெருக்கியும் மின்சார தீபங்களும் அமைக்கப்பெற்ற ஆலய முகப்பில் சிவத்திரு. இரா. சிவ அன்பு அவர்களால் "காரைக்காலம்மையார்" சரித்திரம்பற்றி பக்தி பரவசமூட்டும கதாப்பிரசங்கம் நிகழ்த்தப்பெறும். பக்கவாத்தியங்களும் இடம் பெறும். ——

---

# சிரமதான இயக்கம்

துணுக்காய் மாங்குளம் பாதையில் இ. போ. ச. வினர் பஸ் ... வையை ஆரம்பி... பிரயாணிகளின் வசதியீனங்களை நீக்குதற்பொருட்டு அந்தப் பாதையினைச் செப்பனிட்டுச் சீர்பெற அமைப்பதற்கு சிரமதான இயக்கம் ஒன்றை மேற்படி பாதைப் பிரயாணிகள் சங்கத்தினர் ஆரம்பித்துள்ளனர் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிறும் மேற்படி இயக்கத் தொண்டர்கள் காலை தொடக்கம் மாலை வரை வேலைசெய்து பாதையை உருவாக்கி முடிப்பர்.

22-6-63 சனிக்கிழமை காலை 6 மணிக்கு மல்லாவி கந்தசுவாமி கோவிலில் சிரமதான இயக்கத்தினரின் விசேட பூசையில் யாவரும் பங்குபற்றுவர்.

6-15 க்கு மல்லாவிக் கந்த சுவாமிகோவிலுக் கண்மையில் இப்பாதையில்மாகாணஅதிபரால் சிரமதான இயக்கத்தொண்டு ஆரம்பித்து வைக்கப்பெறும். அத்தருணம்கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. சிவசுந்தரம் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

—0—

## சமாதான நீதிபதி

யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத் தெருவில் வசிப்பவரும், மலாயா கூட்டரசின் இளைப்பாறிய ஊழியரும் தற்போதைய காணி ஏல விற்பனையாளருள் ஒருவருமான திரு. செல்லப்பா இரத்தினசபாபதி அவர்கள் யாழ்ப்பாணப்பகுதிக்குச் சமாதான நீதிவானக நியமிக்கப் பட்டுள்ளார்,

## அ. இ. பொ. சே. சங்க முத்தமிழ்மன்ற நாடகக்குழு

மேற்படி கழகம் இதுவரை இருபத்தேழு நாடகங்களை அரங்கேற்றியுள்ளது. அவர்களின் நாடகங்களுள் முதன்மை வாய்ந்த "குற்றம் எங்கே'' என்ற நாடகம் 16-6-63 ஞாயிற்றுக்கிழமை இரவு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், கொக்குவில் மேற்கில் செ வீ, கனகசபை அவர்களிடம் 29-5-61 தொடக்கம் 17-2-62 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகள் 1963ஞு யூலாய்மீ 5வ (5-7-63) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

வி. சே. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனையாளர்,
12-6-62,

M 47 14, 21-6-63,

யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்'' வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 21-6-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org